திரு. சா. கணேசன் : அவர்கள் அங்கே தயாராக இருந்தால், கட்சிக்காரர் வேண்டும் என்றால் அவர்களை வைத்துக்கொள்ள சௌகரியமாக இருக்குமே என்று சொன்னேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த நடமாடும் கோர்ட்டு களிலே, வண்டியின் உள்ளேயே நடத்துகிறார்களா, அல்லது போலீஸ் ஸ்டேஷன் உள்ளே வழக்கு விசாரணை செய்கிறார்களா என்று அறியலாமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : என்னை விட அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும். எங்கே கோர்ட்டு இருக் கிறதோ அங்கேதான் நடக்கும். வீதியில் நடக்கிறதா, உள்ளே நடக்கிறதா என்றால், கோர்ட்டு எங்கே இருக்கிறதோ அங்கே விசாரணை நடக்கும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, நல்ல முறையிலே இயங்கும் நீதி மன்றங்கள் நடைபெறுகின்றன என்பதால், அதை எல்லா முனிசிபல் நகரங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதைத் தான் சொன்னேன். இப்போது இருப்பது சென்னை நகரத்தைப் பொருத்து இருக்கிறது. தற்சமயம் அதை விரிவு படுத்த யோசனை எதுவும் இல்லை.

சப் மாஜிஸ்ட்ரேட்டுகள்

*269 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் பணிபுரியும் சப்-மாஜிஸ்ட்ரேட்களையும், A.P.P.I. -களையும் கெஜடட் ரேங்குக்கு உயர்த்தும் திட்டம் ஏதும் அரசினரின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், பரிசீலனை எப்போது முடிவடையும் ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) சப்-மாஜிஸ்ட்ரேட்களை கெஜட் பதிவுள்ள தரத்துக்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கக் குற்ற விசாரணை (1-ம் தரம்) உதவி வழக்கறிஞர்களைப் பொறுத்த வரை அத்தகைய செயற்குறிப்பு எதுவுமில்லை.

(இ) இதைப்பற்றி முடிவுக்கு வர இன்னும் சில காலம் ஆகும்.

திரு. சே. மாதவன் : தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட் களைப் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னால் சட்டக் கமிஷன் பரிசீலித்து சில அறிவுரைகளைக் கூறியிருக்கிறது. சப்- மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு உடனடியாக டிஸ்ட்ரிக்ட் முன்சீப் ராங்க் கொடுக்கவேண்டும் அல்லது சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் அல்லது ப்ரமோஷனுக்கு 'லிமிடெட் ஸ்கோப்' தான் இருக்கிறது. அதையாவது இன்க்ரீஸ் பண்ண வேண்டும் என்று

12th March 1966]

சட்டக் கமிஷன் அறிவுரை கூறியிருக்கிறதே, அந்த அறிவுரையை யாவது இந்த அரசாங்கம் பரிசிலனை செய்ததா? இதுபற்றி உயர் நீதி மன்றம் அரசாங்கத்திற்குத் தெரிவித்த கருத்துக்கள் யாவை?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் அங்கத்தினர் குறிப்பிடக்கூடிய விஷயம் அரசாங்கத்தின் 'கன்ஸிடரேஷன்' இல் இருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட விஷயமும், மதுரையில் ஒரு மாநாடு போட்டு அங்கே தெரிவிக்கப் பட்ட நாலைந்து யோசனைகளும் அரசாங்கத்திற்கு வந்திருக் கின்றன. அந்த 'ப்ரபோசல்ஸ்' எல்லாம் அரசாங்கத்தின் 'கன்ஸி டரேஷன்' இல் இருந்து கொண்டிருக்கின்றன.

செங்கற்பட்டு கூட்டுறவு மத்திய பாங்கு

* 270 கேள்வி—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

செங்கல்பட்டு மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கியில் இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் இன்று வரையில் தீவிர சாகுபடி திட்டத்திற்காக எவ்வளவு தொகை எத்தனை விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டது, தாலுகாவாரியாக?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: செங்கற் பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரம் கூட்டுறவு மத்திய பாங்கு மூல மாக 1-7-1965 முதல் 31-1-1966 வரை, முனைப்பு வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் கீழ் தாலுக்கா வாரியாகக் கொடுக்கப்பட்ட கடன் தொகை பற்றிய விவரங்களும் இந்தக் கடன் அளிக்கப்பட்ட குடியானவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	தாலுக்காவின் பெயர்.	முனைப்பு வேளாண்மைப் பகுதி திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட கடன் தொகை.	கடன் கொடுக்கப்பட்ட குடியானவர்களின் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)
1	செங்கற்பட்டு	0·89	185
2	மதுராந்தகம்	1·61	413
3	காஞ்சீபுரம்	0·60	178
4	ஸ்ரீபெரும்புதூர்	0·56	217
5	சைதாப்பேட்டை	0·59	109
6	பொன்னேரி	0·42	76
7	திருவள்ளூர்	0·85	266
8	திருத்தணி	0·72	174

பரங்கிப்பேட்டைப் பகுதி

* 271 கேள்வி—**திரு. சீ. சிவசுப்பிரமணியன்:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா பரங்கிப்பேட்டை கடலோரப் பகுதியில் இருக்கும் காடுகளின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS